# மாலைமணி

ஆசிரியர்:
பி.எஸ்.இளங்கோ


கேரளத்தில் கிளியோபாத்ரா ராஜ்யம் !




விலை 16 காசு

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 | 20-3-60 | ஒலி 19 20

# அண்ணா பொதுச்செயலாளர் பொதுக் குழு!

தென்னகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சமமான ஒரு விடுதலை இயககம இல்லை என்றே நிச்சயமாகக் கூறலாம்! நேற்றுமில்லை, இன்றுமில்லை, நாளையும் இருக்காது என்றே சொல்ல வேண்டும்!

ஒரு இயக்கம் தோற்றுவிக்கப்பட்ட பத்தாண்டு காலத்திற்குள் இப்படியொரு மாபெரும் சக்தியை எந்த இயக்கமும் இதுவரை பெற்றதாக சரித்திரமும் கூறவில்லை!

காங்கிரஸ் கட்சி வலிவடைய, காந்தியாருடைய கருத்துக்கள் மக்கள் மனதிலே பதிய நீண்ட காலம் பிடித்தது நீண்டகாலம்பிடித்துகூட அது சரியானமுறையில் வளாவில்லை மக்களுடைய செல்வாக்கையும் பெற முடியவில்லை! காங்கிரஸ் ஆட்சி அறுபதாண்டு காலத்திற்கு மேல் பணியாற்றிய பின்புதான் அது இந்தியாவிற்குவிடுதலைவாங்கித் தர முடிந்தது அந்த வாய்ப்பும் காங்கிரஸ் கட்சியின் சக்தியாலோ, செல்வாக்காலோ ஏற்பட்டதுமல்ல! இரண்டாவது உலக மகாயுத்தம் விடுதலைக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கித்தந்தது என்றுதான் சொல்லவேண்டும்!

இந்த முறையிலே காங்கிரஸ் கட்சி விடுதலை பெற்றுத் தந்தவுடன் அதன் செல்வாக்கும், சீரும், பேரும் சிதைய ஆரம்பித்து விட்டது, சீர் குலையத் தொடங்கி விட்டது! இதற்கெல்லாம் காரணம் காங்கிரஸ் கட்சியிடத்தில் நல்ல கொள்கைகள், நல்ல கருத்துக்கள், நல்ல இலட்சியங்கள இல்லை என்பது தான்.

இந்த விதத்திலே பார்ப்போமானால் நமக்கீடு, நாமே தான் என்று பெருமையோடும், பூரிப்போடும் சொல்லிக் கொள்ள முடியும்.

ஒரு விடுதலை இயக்கத்திற்கு என்னென்ன இலக்கணங்கள் உண்டோ அந்த இலக்கணங்கள அத்தனையும் நம் இயககத்தில் இருக்கின்றன.

"ஒரு இயக்கம எப்போது இளைஞர்களைக் கவர்கின்றதோ, ஒரு இயக்கம் எப்போது பெண்களின் உள்ளங்களிலே குடிபுகுகின்றதோ, ஒரு இயக்கம் எப்போதுபடித்தவர்கள் பாமரர்கள், பாட்டாளிகள் மத்தியில் உலவத் தொடங்குகின்றதோ, ஒரு இயக்கம் எப்போது அரசாங்க உத்தியோகஸ்தர்களின் உள்ளத்தை உலுக்கி இழுக்கின்றதோ அப்போது தான் அது விடுதலை இயக்கமாகவும் மாறுகின்றது" என்பது தான் அந்த இலக்கணமாகும்!

நம்மிடததில் யாரில்லை? படித்தவர்கள் இருக்கிறார்கள், பண்டிதர்கள் இருக்கிறார்கள், புலவர்கள் இருக்கிறார்கள், எழுத்தாளர்கள் இருக்கிறார்கள. நடிகர்கள் இருககிறார்கள், காவியகர்த்தாக்கள் இருக்கிறார்கள், ஓவியர்கள் இருக்கிறார்கள, மாணவர்கள் இருக்கிறார்கள், நல்ல தமிழ் பேசும் இளைஞர்கள் இருக்கிறார்கள், வணிகர்கள் இருக்கிறார்கள், பட்டாளிகள் இருக்கிறார்கள், பாமரர்கள் இருக்கிறார்கள். பெண்கள் இருக்கிறார்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் நமக்கு ஆருயிர் தோழர்களாகவும் இருக்கிறார்கள். இத்தனை வகையினரையும் இதுவரைஒரு சேர எந்த இயக்கமும்பெற்றிருந்ததாக சொல்லமுடியாது

எந்தத் திக்கை நோக்கினாலும் நம்மையே தான் நாம் காணமுடிகிறது! நாம் இல்லாத வீடில்லை, நம் கொடிகள் பறக்காத ஊரும் இல்லை.

நாம் வளர்ந்திருக்கிறோம்—நாம் வளர்ந்திருக்கிறோம் என்று சொன்னால் மிகப் பெரிய அளவில் வளர்ந்திருககிறோம, யாரும் வளராத அளவும் வளர்ந்திருக்கிறோம்!

இந்த வளர்ச்சியை பககுவப்படுத்தி, பதப்படுத்திக் கொள்ளும் திறமைப் பெற்ற பெரும் தலைவர்களையும் நாம பெற்றிருககிறோம்!

யாருககும் கிடைக்காத அறிஞர் அண்ணா நமக்குக் கிடைத்திருக்கிறார்! அவருடைய கண் காணிப்பிலும் நாம் இருந்து வருகிறோம்! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணாவின் தாரக மந்திரத்தை நாம் ஒருபோதும் மறக்க மாட்டோம்! என்றாலும் வளர்கின்ற இந்த நேரத்தில நாம் மிக மிக பொறுப்போடும், கவனத்தோடும் பணிபுரிய வேண்டும்!

**அறிஞர் அண்ணா அவர்களும், பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், பொதுக் குழுவும்** நமது தாழ்மையான இந்த வேண்டுகோளையும் ஏற்று தயவு செய்து பரிசீலனை செய்து பார்க்க வேண்டும்!

அண்ணா அவர்களுக்கோ, நமது நாவலர் நெடுஞ்செழியன அவர்களுக்கோ அல்லது பொதுக் குழுவுக்கோ நாஙகள் அறிவுரை வழங்குவதாக யாரும் தவறாக நினைக்கக் கூடாது! அந்த அறிவுலக மேதைகளுககு அறிவுரை வழங்கும் ஆற்றல் எஙகளுக்கு ஒரு துளியும் கிடையாது!

இயக்கத்தின் மீதுள்ள அழியாத பற்று, பாசம் காரணமாகத்தான் இதனை கூறமுன வந்துள்ளோம்!

நமது இயக்கம் இப்போது கனிகுலுங்கும் மரமாக தழைத்து வளர்ந்து நிற்கிறது! பூககாது, காய்க்காது வெறும் மொட்டை மரமாக நின்றால் நாம் எப்போதும் கவலைப்படாமலேயே இருக்கலாம! கனி மரத்தை கல்லால் அடித்து, தின்று ருசித்துபலன் காண பலர்—அரசியல் சூதாடிகளிலே சிலர் வரக் கூடும்! அந்த பழம் தின்னும் வௌவால்களுக்கு அந்த கனி மரம் சொந்தமாகி விடக் கூடாது!

இயக்கம் வளர்கிறது என்றால் எவரும் எளிதில் வந்து நுழைந்து விடுவார்கள்! வருபவர்களை துரத்தியடிக்க வேண்டும் என்று கூறவில்லை—நல்லவர்களுக்கு மட்டும் கதவைத் திறந்து விடவேண்டும்.

ஒரு இயக்கம் மிகப் பெரிதாக வளர்ந்து விட்டது என்றால அந்த இயக்கம் சில பல நேரங்களிலே கட்டுப்பாடு குலையவும் செய்யும்: நம்மிடத்தில் அது போன்ற நிலை இல்லை என்றாலும், எந்த காலத்திலும் அதுபோன்ற நிலை ஏற்படவும் கூடாது. அதற்கான முன் நடவடிக்கைகளை நாம் நிச்சயமாக எடுத்துக் கொள்ளவும் வேண்டும்.

நாம் ஜனநாயக முறையில் தான் இயங்க வேண்டும்! அதில் யாருக்கும் கருத்து வேற்றுமையும் இருக்க முடியாது! நம்மிடத்தில் இருக்கிற ஜனநாயக முறை எநத கட்சிகளிடத்திலும இல்லை! ஆனால் ஜனநாயகம் என்னும் சொல் கட்டுப் பாட்டைக் குலைத்து விடக் கூடாது!

கழகம் என்ன கட்டளை இடுகிறதோ, நமது அண்ணா என்ன ஆணையிடுகிறாரோ அதை நிறைவேற்றித்தர இலட்சக் கணககான இளைஞர்கள் காத்து நிற்கின்றனர்! இந்த நிலை என்றும இருக்க வேண்டும்!

இந்த நேரத்தில எல்லாவற்றையும் விட நமக்கு கட்டுப் பாடு தான் மிக மிக தேவையானதாகும்! பலகாலமாக கழகத்தில் ஈடுபட்டு, கல்லடியும், சொல்லடியும் தாங்கிக் கொண்டு, எதையும் எதிர்பாராது உழைத்து வரும் உத்தமர்களிடத்தில் நாம் கட்டுப்பாடுகளைப் பற்றி அதிகம் பேசத் தேவையில்லை! ஆனால், ஒரு சிலர் புரியாமலேயே இந்தத் தவறைச் செய்யக கூடும்! இந்த சிறு தவறு கூட நம் கழகத்தில் ஏற்படக் கூடாது!

இன்னும் இரண்டொரு காலத்தில் பொதுத்தேர்தல் வர இருக்கிறது. அதற்கு நம்மை, நாம் தயார் செய்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு இடத்திலும் நல்ல திறன் பெற்ற செயல் வீரர்கள் இருக்கிறார்கள், அந்த செயல் வீரர்களை தேர்தலிலே நாம் சரியான முறையில் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

(11-ம் பக்கம் பார்க்க)

# அனுபவமிக்கவர்களே ஆட்சி மன்றத்திற்குச் செல்ல வேண்டும்!

## சுயராஜ்ய சர்க்காரிலும் அதிகாரிகள் மக்களை மிரட்டுகிறார்கள்!

## எங்களுடன் சேர்ந்தால் செங்கல்வராயனை டெல்லிக்கு அனுப்புகிறேன்!

### தபால் தந்தி ஊழியர்கள் கூட்டத்தில் அறிஞர் அண்ணா முழக்கம்!

சென்னை தபால்-தந்தி இலாகாவின் பணியிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்ற சென்னை மாநகர் துணை அஞ்சலக அதிகாரியும், தபால் தந்தி இலாகா தொழிலாளர்களுக்காக அரும்பாடுபட்ட திரு P.S. கிருஷ்ணன் அவர்களுக்கு 5-3-60ம் தேதி மாலை நடைபெற்றப் பாராட்டுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பொன்னாடை போர்த்திப் பேசியதாவது:—



அன்புள்ள தலைவர் அவர்களே! அருமை நண்பர்களே, தபால் தந்தி ஊழியர்களே!

இன்று நான் இங்கு நடைபெறும் விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை நல்கிய நண்பர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீண்ட பல நாள் அஞ்சல் துறை இலாகாவில் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கும் ஒரு அதிகாரிக்குப் பாராட்டுரை வழங்கும் ஒரு விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்று தபால்—தந்தி ஊழியர்களின் சார்பில் நண்பர்கள் கேட்டார்கள்.

இங்கு நடைபெறும் இந்த விழா எனது உற்ற நண்பரும், தபால் தந்தி ஊழியர்களுக்காக அரும்பாடுபட்டவரும், என் தூய மதிப்பிற்குட்பட்ட செழுந்தகை நண்பரும் என் மீது அன்பும் பாசமுள்ள திரு. கோபாலகிருஷ்ணனுக்குத்தான் இந்த விழா— இவ்வளவு சிறப்பான பாராட்டு என்று எனக்குத் தெரியாது. இங்கு வந்து பார்த்தபின் தான் தெரியும். இது கண்டு நான் அளவற்ற மகிழ்ச்சியடைந்தேன் இன்று அவருக்குப் பொன்னாடை போர்த்தும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்கு மிகவும் அகமகிழ்கிறேன்.

இந்த தபால் தந்தி சங்கம் இவருக்கு வரவேற்பும் பொன்னாடையும் போர்த்தியது என்றால், அவர் நீண்ட பல ஆண்டுகளாக தபால் தந்தி ஊழியர்களுக்காக—அவர் பட்ட கஷ்ட நஷ்டங்களுக்காக—அவர் ஊழியர்களிடத்தில் காட்டி வந்த அன்பிற்காக நன்றி செலுத்தவே. அவருக்குப் பெருமைப்படுத்தவே இதைச் செய்திருக்கிறது.

நண்பர் கோபாலகிருஷ்ணன் தொழிற்சங்க இயக்கங்களில் ஈடுபட்டு பணியாற்றியதை நான் நன்கறிவேன்.

அவரோடு நான் நல்ல தொடர்பு கொண்டிருக்கிறேன். அவர் செய்த பணிகளில் பங்கு கொண்டிருக்கிறேன். அவருக்கு இப்படிப்பட்ட மகத்தான விழாவை ஏற்பாடு செய்த நண்பர்களுக்குப் பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு தலை சிறந்த நண்பருக்கு பலம் இழந்து, உடல் தளர்ந்து பதவியிலிருந்து ஓய்வு பெற்றிருக்கும் நண்பருக்கு இங்கு பெருமைப் படுத்துவது மிகவும் போற்றத்தக்கதாகும்.

இந்தப் பெருமை எல்லோருக்கும் கிடைக்காது.

எனது நண்பர் கோபாலகிருஷ்ணனுக்குத்தான் இந்தப் பெருமை கிடைத்திருக்கிறது. அவர் காட்டிய அன்பிற்கும், உழைப்பிற்கும், அவர் நடந்து கொண்ட முறைக்குமே இந்தப் பெருமை கிடைத்திருக்கிறது.

பொதுவாகவே அரசாங்க அலுவலகத்தில் பல ஆண்டுகள் ஒருவர் பணியாற்றி இருக்கிறார் என்றால் அவர் பலரிடம் வெறுப்புக்கு ஆளாகியிருப்பார். பலர் அருவருப்பு அடையும் நிலை பெற்றிருப்பார்.

தொடர்ந்து பத்து பதினைந்து ஆண்டுகள் அரசாங்க அலுவலகத்தில் பணியாற்ற வந்திருந்தால் "இது இன்னுமா தொலையவில்லை. எப்போ விலகப் போகிறது" என்று கேட்பார்கள். ஆனால் இங்கு பொது மக்கள் மத்தியில் பொதுப் பணியில் ஈடுபட்டுள்ள அரசியல் கட்சியிலிருக்கும் என்னையும், நண்பர் செங்கல்வராயனையும் அழைத்து பாராட்டப்படுகிறது என்றால் நல்வாழ்த்துக் கூறப்படுகிறது என்றால் அதற்கு காரணம் என்ன?

எனக்கு முன் பேசியவர்கள் "திரு கோபால கிருஷ்ணன் பதவியிலிருந்து விலகினாலும் தொழிற்சங்கப் பணியிலிருந்து விலகக் கூடாது அவரது உழைப்புத் தேவை என்றார்கள். தொடர்ந்து தொழிலாளர்களுக்காகப் பாடுபட வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

எனது நண்பர் செங்கல்வராயன் பேசும் போது அவரை விலக விட மாட்டோம் என கூறினார்.

இது எதை எடுத்துக் காட்டுகிறது. அவரது சிறிய பண்பு— அவரது உத்தமத் தன்மை. தன்னலமற்று உழைத்ததினால் தொழிலாளர்கள் உள்ளத்தில் அவர் பதிந்து விட்டதாலே தான் ஒரு அதிகாரி அலுவலகத்திலிருந்து ஓய்வு பெற்றால், "அப்பா" போகிறாரா என்று மகிழ்வோடு கேட்பார்கள்.

இங்கு பேசியவர்கள் நான் எந்த அரசியல் கட்சியையும் சேர்ந்தவர்களல்ல என்று கூறினார்கள். அது சொல்லுக்காகக் கூறுவது, "சும்மா" கூறுகிறார்கள். எனது நண்பர் செங்கல்வராயன். நல்ல முறையில் திரு. கோபால கிருஷ்ணனைப் பற்றி பேசினார்கள்.

(5-ம் பக்கம் பார்க்க)

# ஆட்சியாளர்கள் புள்ளி விபரம் கொடுத்தால் மட்டும் போதாது !

## தொழிலாளர்களுக்கு ஊதியமும் உயர்த்தப்பட வேண்டும் !

## உழைப்புக்கேற்ற ஊதியம் கேட்பது அதிகாரிகளை மிரட்டுவதற்கோ-வம்புபேசுவதற்கோ அல்ல !

### நாவலர் நெடுஞ்செழியன் விளக்கம் !

சென்னை மருத்துவ நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்கள் சங்க (ஆஸ்பத்திரி தொழிலாளர்கள் சங்கம்) கூட்டம் சென்னை கீழ்ப்பாக்கத்தில் மனநோய் ஆஸ்பத்திரி (பைத்தியக்கார ஆஸ்பத்திரி) தொழிலாளர்களால் அந்த ஆஸ்பத்திரியின் எதிர்புறத்தில் 23-2-60ம் தேதி சங்கத் தலைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



தொழிலாளர் சங்கச் செயலாளர் சாமுவேலுவும், சங்க உபதலைவர் எஸ். கிருஷ்ணமூர்த்தியும் சங்கம் பணியாற்ற வேண்டிய பணிகளைப் பற்றியும் தொழிலாளர்கள் கடமையைப் பற்றியும் விரிவாகப் பேசினார்கள். முதன் முதலாக திரு. நாகராஜன் யாவரையும் வரவேற்றார்.

பின்னர் தலைவர் நெடுஞ்செழியன் அவர்கள் தமது முடிவுரையில் பேசியதாவது:—

மதிப்பிற்குரிய நண்பர்களே! தாய்மார்களே!

இன்று இங்கு இந்தக் கூட்டம் மருத்துவமனைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் சார்பில் இந்த மனநோய் மருத்துவத் தொழிலாளர்களால் கூட்டப் பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றியும், இது செய்து வந்த வேலைகளைப் பற்றியும் தொழிலாளர்களின் கடமைகளைப் பற்றியும் எனக்கு முன் நண்பர்களான சாமுவேல், எஸ். கிருஷ்ணமூர்த்தி மிக அழகாகப் பேசினார்கள். விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் பேசினார்கள்.

இந்தக் கூட்டம் மனநோய் மருத்துவமனையில் பணியாற்றும் தோழர்களின் ஆதரவால் பெரு முயற்சியால் நடைபெறுகிறது. அவர்கள் முயற்சிக்குப் பாராட்டுகிறேன்.

உங்களுக்கிருக்கும் நீண்ட நாளைய குறைகளை நிவர்த்திக்கவும், ஆட்சியாளருக்கு எடுத்துக் கூறவும் உண்மையான நிலையை ஆட்சியாளர்கள் உணர்வதற்கும் அவர்கள் தெரிந்து கொள்ளவுமே இந்த கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது

நான் முன்பு ஒரு கூட்டத்தில் கூறியபடி தலைமைப் பதவிக்கு ஆசைப்பட்டோ, உங்களை உபயோகப் படுத்தி கூட்டங்களில் பேசுவதற்கு வாய்ப்புப் பெறவோ நான் தலைமைப் பதவியை ஏற்கவில்லை.

எனது நண்பர்கள் கிருஷ்ணமூர்த்தியும், சாமுவேலுவும உங்களுக்கிருக்கும் நேர்மையான குறைபாடுகள், நீண்ட நாள் தீர்க்கப்படாமல் இருக்கும் உரிமைகள் இவைகளைக் களைய இவைகளுக்கு வழி காண ஒரு சங்கம் நிறுவி அதில் பாடுபட அழைத்தார்கள். அதற்கிணங்கி தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டேன்.

இந்த சங்கம் யாருக்கும்போட்டியாகவோ, எவருக்கும் தொல்லை கொடுக்கவோ. கஷ்ட நஷ்டங்கள் விளைவிக்கவோ, சண்டை சச்சரவுகள் உண்டாக்கவோ, அதனால் விளையும் பயனை வைத்து எங்களது அரசியலுக்கு உபயோகப் படுத்தவோ வேடிக்கையான காரியங்கள் செய்து ஆனந்தம் படவோ நாங்கள் இந்த சங்கத்தைத் துவக்கவில்லை. அதில் பங்கு கொள்ளவுமில்லை.

தொழிலாளர்களின் நல்வாழ்க்கைக்கான வசதிகளை. நியாயமான நேர்மை குறைபாடுகளை எடுத்துச் சொல்ல வேண்டிய இடங்களுக்கு எடுத்துக் கூறவும் ஆட்சியாளர்களிடம், அதிகாரிகளிடம் தொழிலாளர்களே நேரில் கூற முடியாதிருப்பவைகளை நாங்கள் கூறவே பொறுப்பேற்றுக் கொண்டோம்.

இன்று ஆஸ்பத்திரி தொழிலாளர்களின் குறைகளை எவரிடம் கூற வேண்டுமோ. எவர் காதில் விழ வேண்டுமோ. கோரிக்கைகள் உரியவர்களிடம் போய்சேர வேண்டுமோ அது தொழிலாளர்களால் செய்ய முடியாது.

எங்களால் முடியும், அதைச் செய்ய முடியும், எங்களுக்கு அந்த வாய்ப்பிருக்கிறது, காரணம் நாங்கள் பொதுப் பணியில் இருக்கிறோம். பொது மக்கள் மத்தியில் உலவுகிறோம். ஆகவே எங்களுக்கு தொழிலாளர் அந்தப் பொறுப்பை எங்களிடம் ஒப்புவித்துள்ளார்கள்.

உதாரணமாக, மருத்துவ மனைகளிலுள்ள கண்காணிப்பாளர்கள் (சூப்பரின் டெண்டெண்டுகள்) மருத்துவ மனைகளின் இயக்குனர் (D.M.S.) சுகாதார இலாகா செயலாளர் (ஹெல்த் செக்ரட்டரி) ஆகியவர்களைக் கண்டு நாங்கள் பேசினோம். உங்கள் குறைகளடங்கிய மனுவைக் கொடுத்தோம். நீண்ட நாட்களாக செய்யாது தேங்கி இருக்கும் அவசியத் தேவைகளை அவர்களிடம் வற்புறுத்தினோம். அதை அவசியம் செய்வதாகவும் அடிக்கடி வந்து அவர்களிடம் கூறும் படியும் கூறினார்கள். இந்தவாய்ப்பும், வசதியும் எங்களிடம் இருந்ததால் நாங்கள் சொல்ல முடிந்தது.

(9-ம் பக்கம் பார்க்க).

# பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கவேண்டும்!

(அண்ணா பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியலில் எங்களுக்கு தொடர்பு இல்லை என்பது தெளிவு வந்த பின் சொல்லும் வார்த்தை இது! அவர்கள் சாமார்த்தியமாகக் கூறும் சொல் என்று நண்பர் செங்கல்வராயன் பேசும் போது சாமர்த்தியமாகப் பேசினார்! "சென்னை நகரை "ஏ" வகுப்பு நகரமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்குப் பதிலளிக்கும் முறையில் பேசினார்.

'நான் டில்லி சென்றிருந்தால் செய்திருப்பேன்—டில்லிக்குத் தான் அனுப்பவில்லையே என்றார்! அவருக்கு அன்போடு கூறுகிறேன்" "என்னோடு சேருங்கள் டில்லிக்கு அனுப்புகிறேன்,"

இல்லை அவர்களே அனுப்புவார்கள் என்ற நம்பிக்கை இருந்தால் அங்கிருந்தே செல்லுங்கள்!

அவர் எங்கிருந்தாலும் நீதிக்கும் நேர்மைக்கும் உழைப்பார் என்பதில் சந்தேகமில்லை. அவர் நல்லெண்ணம் படைத்தவர்,

நீங்கள் எந்த அரசியல் கட்சியிலும் ஈடுபடாதவர்கள் என்று கூறப்பட்டது.

இன்று இங்கு நடைபெறுவது மக்களாட்சி நடைபெற்று வருகிறது. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை முட்டிமோதி வாக்குகள் பெற்று ஆட்சிக்குச் சென்று ஆட்சி நடத்துவார்கள்.

இந்த மாதிரியான நிலையில் உங்களுடைய ஆதரவு இல்லாது எந்தக் கட்சியும் வெற்றி பெற முடியாது.

தபால் தந்தி ஊழியர்களாகிய நீங்கள் இமயம் முதல் குமரி வரை இருந்து வருகிறீர்கள்.

அலுவலகங்களில் பணியாற்றுபவர்களுக்கான உண்மையான பிரதிநிதிகள்—நண்பர் கோபாலகிருஷ்ணனைப் போன்ற அனுபவசாலிகள் சட்ட மன்றங்களில் பாராளுமன்றங்களில் இருக்க வேண்டும், அப்படியிருந்தால் தான் உங்கள் உண்மையான குறைகளை எடுத்துக் கூற முடியும்.

அரசியல் துறைவேறு. தொழிற் துறைவேறு.

நானோ, நண்பர் செங்கல்வராயனோ உங்களைப் பற்றிப் பேசுவது என்பது வேறு—உங்கள் பிரதிநிதிகள் பேசுவது வேறு. அவர்கள் தான் ஆதாரங்களோடு பேச முடியும்!

அவர்களுக்குத் தான் எங்கிருந்து வருமானம் இருக்கிறது. செலவு எப்படி எப்படி செலவாகிறது. எதை, எதைக் குறைக்கலாம் என்று கூறமுடியும்.

இன்று மேல் சபைக்கு வக்கீல்களுக்காக—உபாத்தியாயர்களுக்காக கலைஞர்களுக்காகப்பிரதிநிதிகள் இருப்பது போன்று, அலுவலகங்களில் பணியாற்றுபவர்களுக்கான பிரதிநிதிகளையும் நியமிக்க வேண்டும். கீழ்சபைக்கு இல்லாவிட்டாலும் மேல் சபைக்கும் நியமிக்க வேண்டும்.

நீங்கள் கேட்கலாம், மாகாண மன்றங்களில் இருந்தால் என்ன செய்ய முடியும் என்று. இங்கிருந்து வற்புறுத்தலாம், கிளர்ச்சி செய்யலாம், அங்குள்ளவர்களுக்கு எடுத்துக் கூறலாம்,

பாராளு மன்றங்களில் கூட உங்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டும்.

அப்படியானால் அங்கு வாதாட முடியும். அது நியமன மூலமோ தேர்தல் மூலமோ எப்படியானாலும் சரிதான். அலுவலகங்களில் பணியாற்றுபவர்களின் பிரதிநிதி இருக்க வேண்டும்.

இரண்டு மூன்று தினங்களுக்கு முன் ஒரு பாங்க் அதிகாரி, பாங்க் ஊழியர்களின் குறைகள் பற்றி அறிக்கை விட்டிருந்தார். ஊழியர்கள் குறைகள் நிவர்த்திக்க முடியாது. நஷ்டம் வருமென்று கூறியிருக்கிறார். இதை மறுத்து, அது தவறு என்று கூற அங்குள்ளவர்களால் தான் முடியும்,

உங்களுக்கு ஒரு உதாரணம் கூற ஆசைப்படுகிறேன். சென்ற ஆண்டு சட்டமன்றத்தில் வரவு செலவு திட்டத்தின்போது விவாதிக்கும் நாள் குறிக்கப் பட்டது. செலவினமாக 75 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது.

சட்ட மன்றத்தில் இருப்பது 205 அங்கத்தினர்கள்.

அவர்களில் கட்சித் தலைவர்களுக்கு 30 நிமிடத்திலிருந்து 35 நிமிடம் இந்த 35 நிமிடத்தில் எல்லா விஷயங்களையும் அலசிப் பேச வேண்டும். குறிப்பிட்ட விஷயம் பேசுவதற்குள் நேரமாகிவிடும்.

அங்கத்தினர்களுக்கோ 10நிமிடத்திலிருந்து 15நிமிடத்திற்குள் பேச வேண்டும். ஐந்தப் பதினைந்து நிமிடத்தில்தனது தொகுதியைப் பற்றிப பேசவேண்டும்.

பாராளு மன்றத்தில் இன்னும் அதிக சங்கடம். அங்கே 500 அங்கத்தினர்கள். அவர்கள் பேசுவதற்கு அவகாசம் கிடைப்பதே இல்லை,

பஞ்சாயத்து மசோதா சட்டமாக்கப்படவிருக்கும் போது நடந்த கமிட்டி கூட்டத்தில் அந்த மசோதாவைப் பற்றி அங்கு ஆராய்ந்தோம். அந்த நாங்கள் மேலாக இருக்கும் நிலையைப் பற்றித்தான் ஆராய்ந்தோம்.

ஆனால் நீதிமன்றங்களின் சார்பில் மேல் சபைக்கு வந்த ஒருவர் சட்ட பிரச்சினையைக் கொண்டு சட்டத்தின் மூலம் வரும் சிக்கல்களை எடுத்துக் கூறி விளக்கினார் அவர் அனுபவத்தைக் கொண்டு விளக்கினார்.

எதிலும் அனுபவத்தை விட அறிவே சிறந்து விளங்கும்.

அமைச்சர்களுக்குமட்டும் அனுபவம் இருக்கிறதுஎன் நினைத்துவிடாதீர்கள். அதிகாரத்தைக் கொண்டு தான் அவர்கள் காரியம் செய்கிறார்கள்.

அமைச்சர்களாகி விட்டால் அனுபவம் வந்து விடுமென்று சிலர் நினைக்கிறார்கள். தவறான காரியம்.

இன்று மருத்துவத் துறையில் அமைச்சராக இருப்பவருக்கு அதைப் பற்றிய அனுபவமோ, திறமையோ இருப்பதில்லை. அந்தத் துறையைப் பற்றியே தெரியாது.

அது போல் தான் இஞ்சினியர் இலாகாவுக்கு மந்திரியாக இருப்பவருக்கும் அந்தத் துறையைப் பற்றி எதுவுமே தெரியாது. அந்த இலாகாவில் இருக்கும் நிலையை எப்படி அறிந்து கொள்ள முடியும்! பட்டமே பெறுதவர்—சாவகலா சாலையில் நுழையாதவர் பட்டமளிப்பு விழாவில் கலந்து பேசுகிறார். இது எவ்வளவு பரிதாபமான நிலைமை! இப்படிக் கூறுவதற்கு நண்பர் செங்கல்வராயன் மன்னிக்க வேண்டும். இருக்கும் நிலையைத் தான் கூறுகிறேன்.

மக்களாட்சி என்பது 'சோன்' என்று ஆராய்ச்சியாளர் நல்ல விளக்கம் தந்திருக்கிறார். "பங்சனல் டமாக்கரசி என்று கூறியிருக்கிறார்,

நண்பர் கோபால கிருஷ்ணன் 20 ரூபாய் சம்பளத்தில சேர்ந்தேன் என்று கூறினார். அவர் பட்ட தொல்லைகளைப் பற்றிக் கூறினார். பின் உயர்ந்த உத்தியோகத்திற்கு வந்ததை விளக்கினார். அவர் சங்கம் கண்டதைப் பற்றியும் அதில் பாடுபட்டதை பற்றியும் அதனால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் பற்றியும் விளக்கினார்.

(8-ம் பக்கம் பார்க்க)

---

## 'என்னை டெல்லிக்கு அனுப்புங்கள்' செங்கல்வராயன் வேண்டுகோள் !

"சென்னையை 'ஏ' வகுப்பு நகரமாக்க நான் பாடுபட வேண்டுமென்று கேட்கிறார்கள். அவசியம் பாடுபடுவேன். ஆனால் என்னைத் தான் டெல்லிக்கு அனுப்பவில்லையே. டெல்லிக்கு அனுப்புங்கள். அதை முதலில் செய்கிறேன்".

★ ★

## 'என்னுடன் சேருங்கள் டெல்லிக்கு அனுப்புகிறேன்!'

### அறிஞர் அண்ணா

"டெல்லிக்கனுப்பினால் சென்னை நகரை 'ஏ' வகுப்பு நகரமாக்குவதாக, என் நண்பர் செங்கல்வராயன் கூறினார்.

அவர் என்னுடன் சேரட்டும் அவசியம் டெல்லிக்கு அனுப்புகிறேன்."

# சூதாட்டுச் சாம்பல்



பி. எஸ். இளங்கோ

"பெண்டு பிள்ளை, மாடு, மனை என்றால் நாட்டைதான் யார் கவனிப்பது?" வேல்விழி அரசியல் பேச ஆரம்பித்தாள்!

"நீங்கள் சொல்லுவது உண்மைதானம்மா? ஆனா..?'

"என்ன ஆனா...?"

"பேமானி பசங்களெல்லாம் அரசியலிலே சேர்ந்துதான் குட்டிச் சுவராக்கி விட்டாங்களே!"

"ஏதோ ஒரு சிலர் அப்படி இருக்கலாம்! அதனால் அரசியலையே வெறுக்கலாமா?" வேல்விழி அரசியலுக்கு விளக்கம் வேறு தர ஆரம்பித்தாள்!

"எல்லோருமே அப்படித் தான்! நாடு நாடு என்று சொல்லிக் கிட்டு ஊரை ஏமாத்துகிற பசங்கதான் 'ரொம்ப' அதிகமாகி விட்டது!

## அத்தியாயம் 33

இராணுவ தளபதி கர்னல் தாபசை சந்திக்கச் சென்ற பாண்டியன் ஒரு வாரமாகியும் வீடு திரும்பவில்லை! இது வேல்விழிக்கு பெரும் மனக் கலக்கத்தை ஏற்படுத்தியது! "என் அத்தான் ஒரு நாள்கூட என்னை விட்டுப் பிரிந்திருக்க மாட்டாரே! ஒரு வாரகாலம் என்னை ஏன் தவிக்க விட்டுவிட்டு தங்கி விட்டார்" என்று அவள் உள்ளம் அனலில் போட்ட மெழுகு போல் உருகிக்கொண்டிருந்தது.

"ஒருவேளை இராணுவ தளபதியோடு முக்கிய வேலைகளில் ஈடுபட்டிருப்பாரோ, ஒருவேளை எதிரிகளிடம் பிடிபட்டு சிறைக் கைதியாகி வாடிக் கொண்டிருப்பாரோ! சேச் சே! இருக்காது! தளபதி கர்னல் தாபஸ் இருக்கும் போது அவரை என்ன செய்ய முடியும்! ஏன் முடியாது! கர்னல் தாமசே துரோகியாக மாறி அத்தானைக் காட்டிக் கொடுத்திருந்தால்...... ஐயோ நினைக்கவே மனம் தடுமாறுகிறதே" என்று எண்ணாத எண்ணத்தையெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தாள்.

"ட்ரைவர், ட்ரைவர்! வண்டியை எடு" என்று வேல்விழி, சூரப்புலி சுந்தரத்திற்கு கட்டளை இட்டாள்.

"இதோ வந்து விட்டேன் அம்மா!" கண்மூடி கண் திறப்பதற்குள் ட்ரைவர், ஜீப் வண்டியைக் கொண்டுவந்து நிறுத்தினான்.

"இந்த ட்ரைவர்... சேச்சே! யாரையும் நம்பாமல்தான் எப்படி உலகத்தில் வாழ முடியும்! வெளுத்தது எல்லாம் பாலாகி விட முடியுமா? ஒருவேளை...! எனக்கு மட்டும் தைரியமில்லையா? பெண்களென்றால் கோழைகள் என்று நினைத்த காலம் மலையேறி விட்டது! நாம் ஏன் அச்சப்பட வேண்டும்! இருந்தாலும் ஜாக்கிறதையாக இருப்பது நல்லதல்லவா?" என்ற எண்ணப் போராட்டத்திற்கு பின்பு ஒரு கைத் துப்பாக்கியை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு ஜீப் வண்டியில் தைரியத்தோடு ஏறினாள்.

வண்டி சில மைல்களை கடந்து சென்று கொண்டிருந்தது.

"அம்மா! உங்கள் அப்பா, அம்மா எல்லாம் இங்கேதான் இருக்கிறார்களா?" ட்ரைவர் மெதுவாக உளவறிய ஆரம்பித்தான்.

"இல்லை! அவர்கள் அனைவரும் எமலோகத்தில் சௌக்கியமாக இருக்கிறார்களாம்!" வேல்விழி சிரித்துக்கொண்டே பதில் சொன்னாள்.

"நம்ம வீட்டு அய்யாவுக்கு சர்க்காரிலே வேலைங்களா?"

"ஆமாம்!" வேல்விழி! கருக்கமாகவே பதிலளித்தாள்!

"என்ன வேலையோ? சம்பளம் ஒரு ஆயிரமாவது இருக்குங்களா?"

"என்ன சுந்தரம்! நீ என்ன ட்ரைவரா? அல்லது இன்கம் டாக்ஸ் இன்ஸ்பெக்டரா?" வேல்விழிக்கு கோபம் வந்து விட்டது என்பதை இந்தக் கேள்வி அவனுக்கு சொல்லாமல் சொல்லியது.

"இல்லையம்மா நீங்க நல்லா இருந்தால் தான் எனக்கு நாலு காசு கிடைக்கும்! அதனால் தான் இதையெல்லாம் கேட்டேன்!" சுந்தரம் சமாளித்துக் கொண்டான்.

"எங்க வீட்டு அய்யாவுக்கு ஒரு வேலையும் கிடையாது! அரசியல்தான் அவருக்கு உத்தியோகம்!" வேல்விழி மனம் விட்டே பேச ஆரம்பித்தாள்.

"என்னம்மா! போயும் போயும் அரசியலில் தான் அவரு சேர வேண்டும்."

"ஏன் சுந்தரம்? அரசியல் என்றால் உனக்குப் பிடிக்காதா?"

"அந்த பக்கமே நான் தலை வச்சி படுக்கிறது இல்லே!"

"ஏன் உனக்கு அரசியலிலே வெறுப்பு?"

"அரசியலிலே ஈடுபட்டால் பெண்டாட்டியோடு பேச முடியாது, பிள்ளைக் குட்டிகளைப் பார்க்க முடியாது, சுகதுக்கங்களை அனுபவிக்க முடியாது!" சுந்தரம் அடுக்கிக் கொண்டே போனான்.

"அப்படி சொல்லாதே சுந்தரம்! எல்லோருமே அயோக்கியர்கள் அல்ல! யார் யாரோ சொல்லுவதைக் கேட்டு அப்படியெல்லாம் பேசாதே"

"எனக்கு தெரிஞ்சு எத்தனையோ அயோக்கிய சிகாமணிகளை அரசியலில் பார்த்திருக்கிறேன!" சுந்தரம் ஆத்திரத்தோடே பேசினான்!

"அப்படியா!" வேல்விழி ஆச்சரியம் கொள்வதுபோல் பார்த்தாள்!

"எங்க ஊரிலே பாண்டியன் பாண்டியன் என்கிற ஒரு பேமானி பையன் அரசியல் பெயரால் எவ்வளவு அயோக்கியத் தனங்களை செய்திருக்கிறான் தெரியுங்களா? ஊரான் பெண்டாட்டியையே இழுத்துக்கிட்டு ஓடி விட்டானே!"

"ஏ சுந்தரம்! அப்படியெல்லாம் பேசாதே! நாவை அடக்கு!" வேல்விழியின் உள்ளம் எரிமலையாகி வெடித்தது!

"சரிதாம்மா நிறுத்து!" என்று திடீரென்று வண்டி பிரேக்கைப் போட்டான்.

"சுந்தரம்! என்ன இது?" சீறினாள் வேல்விழி!

"என்னடி! சுந்தரம்! நான் யார் தெரியுமா?" சுந்தரம் வேல்விழியின் கையைப் பிடித்து இழுத்து கீழே தள்ளினான்!

யார் நீ...?

"உன்னால் ஏமாற்றப்பட்டவன்! உன் கணவன்! இப்போதாவது தெரிகிறதா?"

"ச்சீ துன்மார்க்கா! நீயா என் கணவன்!

(7-ம் பக்கம் பார்க்க)

# பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் குறளை கட்டாயப் பாடமாக்க வேண்டும்!

## வள்ளுவர் படம் வெளியீட்டால் அஞ்சல் துறைக்கே தனிச் சிறப்பு !

### வள்ளுவரை தந்த ஓவியருக்கு தமிழக அறிஞர்கள் பாராட்டு !



திருவள்ளுவர் திருவுருவ வெளியீட்டு விழாவும், அதனை அழகுற, வள்ளுவரின் திருவுருவப் படத்தை தீட்டித் தந்த உயர் திரு. வேணுகோபால் சர்மா அவர்களைப் பாராட்டுவதற்கும் ஒரு பெரும் விழா 28-2-60ம் நாள் சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் உள்ள திறந்த வெளி அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு பல அரசியல் தலைவர்களும், தமிழறிஞர்களும் மதத் தலைவர்களும் கலை உலக நண்பர்களும் வந்திருந்தனர்.

இவ்விழாவிற்கு ஏராளமான பொது மக்கள் ஆண்களும் பெண்களுமாகக் கூடி சிறப்பித்தனர்.

திரு. வேணுகோபால் சர்மா அவர்களால் சிறப்புற அமைத்துத் தந்த வள்ளுவப் பெருந்தகையின் திருவுருவப் படத்தை மேடையில் அலங்காரப் படுத்தி மக்கள் பார்வைக்காக வைக்கப் பட்டிருந்தது.


முதன் முதலாக சென்னை திரு பி.என். கோவிந்தசாமி பிள்ளை குழுவினரின் நாதசுர இசை விருந்து நடைபெற்றது.

பின் குமாரிகள் லீலா, பத்மா, ஆகியவர்களின் குறள் இசை நடைபெற்றது.

டைரக்டர் திரு. கே. சுப்பிரமணியம் அவர்கள் விழாவிற்கு வந்திருந்த பொது மக்களையும், விழாவில் கலந்து கொண்ட தலைவர்களையும் வரவேற்று விழாவின் நோக்கத்தையும் விளக்கி உரையாற்றினார்!

பின் விழாவிற்கு தமிழறிஞர் டாக்டர் அ. சிதம்பரநாதன் எம்.எல்.சி அவர்கள் தலைமைதாங்கி திரு. சர்மா அவர்களின் முயற்சியைப் பாராட்டியும், அஞ்சல் தலையில் வள்ளுவரின் உருவத்தை அமைத்த மத்திய அரசினையும், அதற்காக பாடுபட்ட மாநில அமைச்சர்களையும் சிறப்பாக மத்திய அமைச்சர், டாக்டர் சுப்பராயன் அவர்களையும் பாராட்டி திருவள்ளுவரின் திருவுருவம் அமைந்திருக்கும் சிறப்பைப் பற்றியும், வள்ளுவப்பெருந்தகை தந்துள்ள குறளின் மேன்மையைப் பற்றியும், அதற்கு உலகமெல்லாம் இருக்கும் பெருமையைப் பற்றியும் அழகான உரை ஒன்று நிகழ்த்தினார்.

பின், மாநில கல்வி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் சர்மா அவர்களால் தீட்டப் பட்ட திருஉருவப் படத்தைத் திறந்து வைத்து, விழாக் கொண்டாடுவதைப் பாராட்டியும், விழாவிற்கு பல கருத்து மாறுபட்ட அரசியல் தலைவர்களும் மற்றவர்களும் கலந்து கொள்வதற்கு மகிழ்ச்சி தெரிவித்தார். மேலும் அவர் பேசுகை



யில் வள்ளுவரின் உருவம் அஞ்சல் தலையில் பொறிக்கப் பட்டிருப்பது வள்ளுவருக்குச் சிறப் பல்ல. அது அஞ்சல் தலைக்கும் அஞ்சல் இலாகாவிற்கும் பெருமை என்று கூறி, வள்ளுவர் குறள் போதிக்கும் அறிவுரைகளையும் விளக்கிப் பேசி திருவுருவத்தை திறந்து வைத்தார்.

வள்ளுவரின் சிறப்பைப் பற்றியும், குறளில் தந்துள்ள மேன்மையான கருத்துக்களையும், திரு உருவம் தீட்டிய திரு. சர்மா அவர்களையும் பாராட்டியும் பல தலைவர்கள் தந்த கருத்துக்களைச் சேர்த்து, அழகான படங்களுடன் விழாக் குழுவினர் வெளியிட்டுள்ள சிறப்பு மலரை குன்றக்குடி அடிகளார் வெளியிட்டுப் பேசினார். அவர் பேசும் போது திருவுருவம் அமைந்துள்ள சிறப்புப் பற்றியும், அதைத் தீட்டிய சர்மாவைப் பாராட்டியும் வள்ளுவர் குறள் வாழ்க்கைக்கு வழி காணும் ஒரு வழி காட்டியென்றும், அதில் உண்மைக் கருத்துக்கள் பொதிந்துள்ளனவென்றும் பல ஆசிரியர்கள் கற்பனைகளை தாங்கள் நினைத்ததை நூல்களில் எழுதுவார்களென்றும், ஆனால் வள்ளுவர் தாம் காணும் உண்மையை தம் மனக்கண் முன் தோன்றுபவைகளை, யாரும் எளிதில் ஒப்புக் கொள்ளும் வகையில் எக்காலத்திலும் ஏற்றுக்கொள்ளும் முறையில் நமக்குத் தந்துள்ளாரென்றும், வள்ளுவர் உருவம் அஞ்சல் தலையில் பொறிக்கப்பட்டது மட்டும் போதாதென்றும் அவர் குறள் எங்கும் பரவும்வண்ணம் அரசினர் செய்ய வேண்டுமென்றும் ஒரு நீண்ட விளக்கவுரை தந்து மலரை வெளியிட்டார்.

பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாதுரை அவர்கள் வள்ளுவர் உருவம் எப்படி எப்படி இருக்கிறது. அது நமக்குக் காட்டும் கருத்துக்களென்ன என்பது பற்றியும், வள்ளுவர் கூறிய வாய்மையைப் பற்றியும் விளக்கமான ஒரு உரை நிகழ்த்தினார்.

பின் ப. ஜீவானந்தம் அவர்கள் வள்ளுவரைப் பற்றி பல மேலை நாட்டு அறிஞர்கள் கூறிய பாராட்டுரைகளையும், வள்ளுவர் குறளில் உள்ள வாழ்க்கைக்கு வழிகாணும் நல்லுரைகளையும் கூறி உருவத்திலுள்ள கருத்தமைந்த சிறப்பினையும் கூறிப்பேசினார்.

பின் திருமதி டாக்டர் மோனிகா பெலடன் அம்மையார் (ஆங்கிலத்தில் பேசிய போது) இந்த உருவம் அமைக்க எடுத்துக் கொண்ட முயற்சிகளையும் அதனால் அவரடைந்த தோல்விகளையும் பின் இவர் கண்ட வெற்றிகளையும் குறித்துப் பேசி ஒரு நாட்டுக் கவிஞர் அந்த நாட்டுக்கு மட்டும் சொந்தமானவரல்லவென்றும் அவரது குறளை ஆங்கிலத்தில் தரவேண்டுமென்றும், அந்த முயற்சியில் பலர் ஈடுபட்டும் அது வெற்றி தரவில்லையென்றும், இங்கு பல அரசியல் கருத்துள்ள தலைவர்கள் வந்திருப்பதால் அவர்கள் முயற்சித்து அகில உலகத்தாரும் அறியும் வகையில் ஆங்கிலத்தில் வெளியிட வேண்டுமென்றும் கூறி வள்ளுவர் படத்தை வரைந்த சர்மாவைப் பாராட்டிப் பேசியதோடு, தாம் உலக மக்களின் சார்பாக வள்ளுவரின் உருவத்தை அஞ்சல் தலையில் பொறித்த அரசினரையும், சர்மாவையும் பாராட்டுவதாகக் கூறி சர்மாவிற்கு மலர்மாலை சூட்டினார்.

பின் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் வள்ளுவர் குறளில் காட்டியுள்ள மேன்மையும், அதனால் மக்களுக்கு பயன்படும் வகைகளையும், குறள் வாழ்க்கைக்கு வழி காட்டும் தன்மைகளையும் விளக்கிப் பேசி உருவம் தந்த சர்மாவைப் பாராட்டினார்.

பின் கலைஞர் கருணாநிதி அவர்கள் வள்ளுவரின் உருவம் அமைந்துள்ள சிறப்பை எடுத்துக் கூறும் போது உருவம் வள்ளுவரின் குறளை மனக்கண் முன் வைத்து அமைக்கப்பட்டிருக்கிறதென்றும், ஒவ்வொரு அங்கமும் ஒவ்வொரு பாடலை எடுத்தியம்புவதுபோல்இருக்கிறதென்றும், வள்ளுவர் மக்கள் இன்புற்றிருக்க எடுத்தியம்பப்

(8-ம் பக்கம் பார்க்க)

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஆமாண்டி அமாம்! நான் தான்! அன்று மாலையிட்டவன் நான் தான்! மாங்கல்யம் சூட்டியவனும் நான்தான். இன்று உன் வாழ்வுக்கு ஒரு முடிவு தேட வந்திருப்பவனும் நான் தான்!" என்று ஆத்திரத்தோடு வேல்விழியை பலாத்காரம் செய்ய முயன்றான்!

மனிதர்கள் சஞ்சரிக்காத இடம்! மிருகங்கள் வாழும் காடு! என்ன செய்வாள்! துடித்தாள், கெஞ்சினாள், சுந்தரமோ கொடுமை படுத்த முயன்றான்! முடிவில் இடுப்பில் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்தாள்!

"ஏ, சுந்தரம் போ, போய் விடு, இல்லையேல்! இந்தத் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகி மடிந்து விடுவாய்!"

"பாதகி! கணவனையா கொல்லப் பார்க்கிறாய்!"

"யார் கணவன்! நீயா என் கணவன்! ஒரு மஞ்சள் கயிற்றையும், மாலையையும் சூட்டி விட்டால் கணவன் என்று எந்த முட்டாள் சொன்னான்."

"என்னடி உன் திமிரை அடக்குகிறேன் பார்!" என்று கூறியபடி வேல்விழியை தன் புறத்திழுத்தான்.

"டுமீல்! டுமீல்! டுமீல்! வேல்விழியின் கைத்துப்பாக்கி சுந்தரத்தை ரத்த வெள்ளத்தில் மிதக்க வைத்தது.

"ஆமாம்! எந்த கை மாங்கல்யத்தை சூட்டியதோ, அதே கைகள் குண்டுகளால் துண்டிக்கப் பட்டுக் கிடந்தான்! எந்த இதயத்தில் வைத்துப் பூஜிக்க வேண்டும் என்று எண்ணினாளோ அந்த இதயம் ரத்தத்தைக் கக்கிக் கொண்டிருந்தது.

பரிதாபகரமான நிலை தான்! நினைத்துக்கூட பார்க்க முடியாத நிகழ்ச்சிதான்! என்ன செய்வது காட்டுப்பற்று, விடுதலை உணர்ச்சி முன்பு இந்த கணவன் மனைவி பாசம் எம்மாத்திரம்!

வேல்விழியின் கண்கள் இரண்டு சொட்டு கண்ணீரை சிந்தின! என்ன இருந்தாலும் தொட்டு தாலிகட்டிய கணவனல்லவா! ஒரு கணமாவது அந்தப்பாசம் இருக்கத்தானே செய்யும்! அடுத்த கணமே மனதைத் திடப்படுத்திக் கொண்டு அதை விட்டு கிளப்பினாள்!

—தொடரும்

(அண்ணா பேச்சு)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் பேசும் போது மனத்திருப்தியோடு, மகிழ்ச்சியோடு பேசினார்.

அவர் வாழ்க்கையில்—எண்ணத்தில் காண வேண்டியதைக் கண்டு விட்டார், அவர் முகத்தில் திருப்திகாணப்படுகிறது. அதனால் தான் அவர் ஓய்வு பெற்றாலும் மாப்பிள்ளை போல் இருக்கிறார். அவர் தலையில் ஒரு நரையும் காணவில்லை.

…ற்ற அதிகாரிகளுக்கும் நண் … கோபால கிருஷ்ணனுக்கும் …ா வேறுபாடு இதுதான்.

…ற்ற அதிகாரியாக இருந்தால் அவர் பெருமைப் பட்டு—தன் உயர்வைப் பேசி மகிழ்வார்.

நமது கோபால கிருஷ்ணன் கவலையின்றியிருக்கிறார்.

அவர் எடுத்துக்கொண்ட காரியம் தாம் ஈடுபட்ட பணி நன்மையை அடைந்திருக்கிறது, நாம் அனுபவிக்காவிட்டாலும் நமது சந்ததிகள் அனுபவிக்கட்டும் என்று எண்ணுகிறார்.

அதனால் திருப்தியடைந்திருக்கிறார். அவருக்கு வயதானாலும் தலைமயிர் நரை காணவில்லை, அவர் தமிழர்.

தசரதனுக்கு தலைமயிர் நரைத்து விட்டது !என்று கவலைப் பட்டு, ராமனுக்குப் பட்டம் கட்ட நினைத்தாராம். இது வடவர் நிலை, அதனால் வடக்குத் தெற்குப் பேசுவதாக எண்ண வேண்டாம். இருக்கும் நிலையைத்தான் கூறுகிறேன்,

இன்று பொது மக்களுக்கும் அரசாங்க அலுவலகங்களுக்கும் தொடர்பு இருப்பதில்லை. பொது மக்கள் சென்றால் அதிகாரிகள் கடுகடுத்த முகத்துடன் பேசுகிறார்கள்.

தபால் தந்தி இலாகா ஒன்றில் தான் அந்த மாதிரி நிலை ஏற்படுவதில்லை,

ரெவினியூ இலாகாவைப் பற்றித்தான் மிக மோசமாகப் பேசப்படுகிறது,

உதாரணமாக கிராமத்திலுள்ள கிராம அதிகாரி ஒருவர் தாசில்தாரிடம் தனது குறைகளைக் கூறவேண்டுமென்றால் அவரைப் பார்க்க முடியாது. ஆனால் ரெவினியூ இன்ஸ்பெக்டரைப் பார்க்க வந்தால் காத்துக் கிடக்க வேண்டும். பின் பணியாளர் சென்று ரெவினியூ இன்ஸ்பெக்டர் வந்ததைக் கூறினால் வரும்படி கூறிவிட்டு அருகிலிருக்கும் நாற்காலியை எடுத்துவிடும்படி சொல்வார். ஏனெனில் வருகிறவர் உட்கார்ந்து விடுவாரோ என்று நினைத்து அப்படிச் செய்வார். கிராம அதிகாரி வருவதை அறிந்து மேஜையைத் தட்டி மேஜை மீதிருக்கும் தூசியைத் தட்டுவது போல் தட்டி தூசி கண்ணில் விழச் செய்து திணறவைத்து வந்தவர் சொல்ல வந்ததைச் சொல்ல முடியாது. சொல்வதற்கான வழியைச் செய்து அனுப்பி விடுவார். இது தான் நடைபெற்று வருகிறது. எனது நண்பர் செங்கல்வராயனுக்கு கூறுகிறேன், இது சுயராஜ்ய ஆட்சியிலும் நடைபெற்று வருகிறது என்பதைக் கூற ஆசைப்படுகிறேன்.

இந்த மாதிரியான நிலைமை பார்க்கவேண்டுமானால், கலந்து. பேசி மற்றவர்களோடு ஒன்றிப் போகும் நிலை வரவேண்டும்.

இன்று நாட்டில் யாருக்கும் திருப்தி கிடையாது. அதிருப்தி வளர்ந்திருக்கிறது.

அரசாங்க அலுவலகங்களில் அதிருப்தி வளர்ந்து வருகிறது. இதையெல்லாம் போக்க வேண்டும்.

நண்பர் கோபால கிருஷ்ணன் பாராட்டு விழாவிற்கு என்னை அழைக்காவிட்டாலும் இவருக்குத் தான் பாராட்டு என்று தெரிந்தால் நான் உடனே வந்து கலந்து கொள்வேன். அவருக்கு மரியாதை செய்வேன். அவர் உங்களுக்காக இன்னும் அவரால் முடிந்ததைச் செய்வார். ஆலோசனை கூறுவார்,

நீங்கள் அவரது தொண்டினை பின்பற்றி பணியாற்ற வேண்டும். எனக்கும் தபால்—தந்தி இலாகா ஊழியர் சங்கத்திற்கும் அதிக தொடர்பு உண்டு. அவர்களுக்கு நான் சார்ந்துள்ள கட்சியின் மூலம் எதுவும் செய்யத் தயாராக இருக்கிறேன்.

எனக்கு இந்தப் பெருமையான பணியைக் கொடுத்து—எனது பழைய—உற்ற—அருமை நண்பருக்கு பொன்னாடை போர்த்தும் பணியைக் கொடுத்ததற்காக நன்றி செலுத்துகிறேன். இதோடு உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

——

# வல்லூறு போன்ற வடநாடு

# தென்னாட்டை வாழ விடுமா ?

★ ★ ★

"நமது முதல் அமைச்சர் காமராசர் நம்மைப்பார்த்து 'மலையாளியோடு, ஆந்திரனோடு, கன்னடியனோடு சேர்ந்து வாழ விரும்பும் இந்த அண்ணாத்துரை, ஏன் வடநாட்டானுடன் சேர்ந்து வாழக் கூடாது?'' என்று கேட்கிறார். எப்படி வாழ முடியும்?

"ஒரு மரத்தில் புறா, குயில், மைனா, கிளி போன்ற பறவைகள் உட்கார்ந்திருக்கின்றன என்று வைத்துக்கொள்வோம். அந்நேரத்தில் வல்லூறு ஒன்று திடீரென்று வந்து உட்கார்ந்தால், இந்த நான்கு பறவைகளும் பறந்து செல்லத்தான் விரும்புமே தவிர, அங்கேயே இருக்க மாட்டா! ஏன்?—வல்லூறு அவ்வளவு கொடுமையானது! அது யாரையும் வாழவிடாது!! அதனிடம் மற்ற பறவைகளும் வாழமுடியாது! இந்த நான்கு பறவைகளும் வெவ்வேறானவை தான். இருந்தாலும் வல்லூறைப் பார்த்தவுடன் எல்லாம் பறந்து விடும்.

"அதைப்போல், திராவிடமாகிய மரத்தின் மேல் புறாவாகிய கேரளமும், குயிலாகிய தமிழ்நாடும், மைனாவாகிய கருநாடகமும், கிளியாகிய ஆந்திரமும் ஒன்று சேர்ந்து இருக்கும் நேரத்தில், வல்லூறாகிய வடநாடு நம்மை வாழ விடாமல், திராவிடமாகிய மரத்தின் மேல் உட்கார்ந்து துரத்தி ஆளுகிறது! இதைப் புரிந்து கொள்ளாத முதல் அமைச்சர் என்னைப் பார்த்துக் கேட்கிறார்—'ஏன் வடநாட்டானோடு வாழக்கூடாது?' என்று. எப்படி வாழ முடியும்?

—அறிஞர் அண்ணா

## மறைமலை அடிகளார் பொதுநிலைக் கழகம்

சென்னை கோகலே மண்டபத்தில் கூடிய பொது நிலைக் கழக 49-ம் ஆண்டு நிறைவு விழாவில் அப்பேரவைக்குத் தலைமை வகித்த பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதனார் அவர்கள் தலைமையிலேயே 'காப்பாளர்க் குழு' அமைக்கப்பட்டது. இக்குழு ஆசிரியர் மறைமலை அடிகள் ஆவணக் குழுவின் செயல்களை நடைமுறை பணிகள் ஆவணக் கட்டளைப்படி நடைபெறுகின்றனவா? என்று பார்வையிடவும், மறைமலையடிகள் மாளிகையைப் பொதுப்படுத்தவும் வேண்டிய முயற்சிகளுக்கு வழி வகை செய்ய அமைக்கப்பட்டது.

காப்பாளர் குழு: திருவாளர்கள் பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதன், எம்.ஏ பி.எச்.டி எம்.எல்.சி, குழுத்தலைவர். டி.ஏ. விசுவநாதன், பி.ஏ.பி.எல் பேராசிரியர் மயிலை சிவமுத்து, கி.இராமலிங்கனார், எம்.ஏ. க. அன்பழகன், எம்.ஏ எம்.எல்.ஏ., ரா. சடகோபாலன், வா.து. மாசிலாமணி முதலியார், வல்லை பாலசுப்பிரமணியம், பி.ஏ. புலவர் தணிகை உலகநாதன், சிறுவை மோகனசுந்தரம் அமைப்பாளன்.

இக்குழுவினை ஏற்று ஆதரித்து உயர்திருவாளர்கள் குன்றக்குடி அடிகள் பேராசிரியர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. பேராசிரியர் மயிலை சிவமுத்து, புலவர் முருகவேள், நாரண துரைக்கண்ணன் டி.ஏ.வி. நாதன், பி.ஏ.பி எல். ஆகியவர்கள் பேசினர். விரைவில் காப்பாளர் குழு கூடி ஆவன செய்யும்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கும் நல்லுரைகளையும் விளக்கிப் பேசியதோடு, அவருடைய இன்பத்துப் பாலில் கூறிய கருத்துக்களையும் விளக்கிப் பேசினார்.

பின் படம் அமைத்து நற்புகழடைந்த சர்மா அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்தவர்களுக்கும் விழாக் குழுவினரும், பல நிறுவனங்களும், நண்பர்களும் மலர் மாலை சூட்டி பரிசுகள் தந்தனர்.

பின் அறிஞர் அண்ணா அவர்கள் விழாக் குழுவினரால் பிரசுரித்துள்ள வள்ளுவரின் திருவுருவப்படத்தை வெளியிட்டு நல்ல கருத்தை செறிந்த—வள்ளுவர் நாட்டுக்கு தந்த நல்லுரைகளை விளக்கி, மக்கள் செய்ய வேண்டிய கடமைகளை உணர்த்தி அழகான சொற்பொழிவு நிகழ்த்தினார்.

தலைவர் முடிவுரையுடனும் நன்றி பகருதலுடன் விழா இனிது முடிந்தது. கூடியிருந்த மக்கள் சர்மா அவர்கள் தீட்டிய அந்த அழகு உருவத்தை-கருத்தமைந்த ஓவியத்தை—மக்களின் வாழ்க்கைக்கு வழிகோலமைத்த அந்த பெருந்தகையின் உருவத்தை வரிசையாக வந்து பார்த்து களித்தனர்.

(நெடுஞ்செழியன் பேச்சு)
(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இதை உணர்ந்தே எங்களிடம் நீங்கள் இந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறீர்கள். நாங்களும் பொது நலத்துறை இலாகா அதிகாரிகள், சுகாதார அமைச்சர் ஆகியவர்களிடமும் உங்கள் குறைகளைக் கூறியிருக்கிறோம்.

இவைகள் எங்களைப் பெருமைப் படுத்தவோ விளம்பரப் படுத்தவோ கூறவில்லை. உள்ள நிலையைக் கூறவே எடுத்துக் கூறினேன்.

எனக்கு முன் பேசியவர்கள் வீட்டு விஷயத்தைப் பற்றி கூறினார்கள். அவர்கள் பணியாற்றும் மருத்துவ மனைகளின் அருகில் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினார்கள்.

இதுபற்றி நாங்கள் அதிகாரிகளிடம் மிகவும் வற்புறுத்தியிருக்கிறோம். அதுபற்றி கவனிப்பதாகவும் கூறியிருக்கிறார்கள்

மந்திரி மாணிக்கவேலர் அவர்களிடம் பேசியிருக்கிறேன்.

இந்த ஆட்சியில் இன்றுள்ள நிலையைப் பார்க்கும்போது ஒரு இலாகா மந்திரிக்குக் கூட ஒரு காரியத்தைச் செய்ய அதிகாரமில்லை என்றே சொல்லலாம்.

இன்று சுகாதார மந்திரி கனம் மாணிக்கவேலர் ஆஸ்பத்திரி தொழிலாளர்களுக்கு வீடு கட்ட வேண்டுமென நினைத்தால் அவரால் முடியாது.

(11-ம் பக்கம் பார்க்க)


# வெற்றிகரமாக நடைபெறுகிறது !



# கற்பனைகளைக் கூறி ஆண்டவனை வணங்கச் செய்கிறார்கள்!

## குறளும் நமது நூல்—மனுவும் நூல் என்று ஏற்றுக் கொள்ள முடியுமா?

(அண்ணா பேச்சு)

(சென்ற வார தொடர்ச்சி)

அதை ஆராய வேண்டும். அதை ஆராய்ந்த பின் அந்தக் "கருவூலத்தை" மக்கள் பின்பற்றும்படி செய்ய வேண்டும். இதையெல்லாம் அடிகளாரும் மற்றவர்களும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடிகளார் பேசும் போது வெளிநாட்டு நாகரீகம் நமது நாட்டு இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது என்று கூறினார் இதையெல்லாம் நாம் ஆழ்ந்து சிந்தித்து வேண்டுவதை ஏற்று தள்ளுவதைத் தள்ள வேண்டும்.

அகத்துறை இன்பம் வளரும்படி செய்ய வேண்டும் இதற்கு வள்ளுவரின் "எப்பொருள் யார் யார் வாய்" என்ற பாட்டே எடுத்துக் காட்டாக விளங்கும்.

இன்று, மேல் நாட்டில் விஞ்ஞானம் புகுந்து பல அற்புத காரியங்கள் நடக்கிறது! சந்திர மண்டலத்திற்கும், சூரிய மண்டலத்திற்கும் செல்லும் ஆச்சரிய சம்பவங்கள் நடக்கிறது.

அது பற்றிக் கூறினால் "அது எப்படி முடியும், திரும்பி வர முடியுமா என்று கேட்பார்கள். அதைச் சொல்லும் போதே பயப்படுவார்கள் ஆபத்து நேரும் என்பார்கள் ஆனால் மேல நாட்டினர் சென்று வெற்றி கண்டு விட்டார்கள்.

ஆற்றல் அங்கே பயன்படுகிறது. விஞ்ஞானம் அங்கு உதவுகிறது.

மெய்ஞ்ஞானத்தில் எந்தப் பொருளைக் காண முடிந்தது. இவைகளை யெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த இருபதாம் நூற்றாண்டுக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய குறள் நமக்குப் பயன்படுகிறது. அதைச் சிந்தித்து, அந்த மாதிரியான பாடல்களைத் தொகுத்து மக்களிடம் தர வேண்டும்.

அடிகளார் பேசுகின்ற போது கூறினார்; குறளில் கற்பனை சில வந்து இருக்கிறது அதனால் தான் அது மக்களிடம் பரவி இருக்கிறதென்று. பல ஆசிரியர்கள் உண்மையைக் கூறினால் நம்ப மாட்டார்கள் என்று எண்ணி தங்களது கற்பனையை கலக்கி விட்டார்கள்! சிலவற்றை மக்கள் நம்ப முடியாதிருக்கிறதென்பதை எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்!

நமது ஆண்டவனைப் பற்றிக் கூறும் போது உண்மைக்கு மாறாக, நம்ப முடியாதபடி கற்பனை செய்திருக்கிறார்கள். அப்படி பல புராணங்கள் இருக்கிறது. அதற்கு பல உட்பொருள்கள் கூறியிருக்கிறார்கள் ஏன் ஆண்டவனைப் பற்றிக் கூறும் போதும் பல கற்பனைகளைப் புனைந்து கூறி வருகிறார்கள். அதனால் ஆண்டவனை விட அவருக்குப் பக்கத்திலுள்ள சிறிய சாமிகளுக்குத் தான் மதிப்பேற்படுகிறது.

இன்று நமது நாட்டில் கூட பல கற்பனைகளைச் சொல்லி மக்களை நம்ப வைக்கப்பார்க்கிறார்கள் மக்களை அடிமைகளாக்க எண்ணுகிறார்கள்.

வள்ளுவரின் குறள் அப்படி அல்ல. உண்மைக்கு ஏற்றபடி, காலத்திற்கு தகுந்தபடி எடுத்தியம்புகிறது!

கற்பனை எப்பொழுதும் பொருந்தாது, அதை மக்கள் ஏற்க மாட்டார்கள். மக்கள் நம்புவதும் கடினம் தான்.

வீரத்துடனும், அஞ்சாநெஞ்சுடனும், பண்பாட்டுடனும் வாழ்ந்தோம். இடைக் காலத்தில் வந்த பல நூல்களால் அது மறைந்து விட்டது.

நமது நூல்களில் அவதாரங்களைப்பற்றிக்கற்பனைப் படுத்திக் கூறி ஆண்டவனைப் பற்றி அவமதித்து விட்டார்கள். சில சமயங்களில் அவதாரம் ஆபாசமான முறைக்குக் கொண்டு வந்து விட்டது. ஆண்டவனைக் கும்பிடுவது மறந்து கருடனைக் கும்பிடும் வகைக்கு மக்கள் எண்ணம் வந்து விட்டது.

நான் அடிகளாரை ஒருமுறை எங்கள் ஊருக்கு வரும்படி அழைக்கிறேன். அங்கு ஆண்டுக்கொருமுறை நடைபெறும் கருடோற்சவத்தைக் கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அங்கு வாதராஜப் பெருமானை வணங்குவதை விட, அவனது வாகனமாகிய கருடனை வணங்குகிறார்கள். மற்றும் சிலர் அதையும் விட்டு மேலே நின்றிருக்கும் அர்ச்சகனது பாதத்தை வணங்குகிறார்கள். இந்த நிலை தேவையா? இது வளர வேண்டுமா என்று அடிகளாரைக் கேட்கிறேன்.

துறவறம் தான் சிறந்தது, இல்லறம் மாயை என்று கூறுகிறார்கள், துறவறத்திலிருந்த விஸ்வாமித்திரர் கதை என்ன? ஒரு பெண் அவர் தவம் செய்யும் போது நடனமாட, அந்த மாதை ரிஷி மோகிக்க, அதனால் குழந்தை உண்டாயிற்று என்று கூறப்படுகிறது. இந்த மாதிரி நூல்கள் நமக்குத் தேவையா?

நமக்குத் தேவையான நூல்கள் எது, நம்முடைய நூல் எது, நாம் ஏற்றுக் கொள்வது எது என்று நாம் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

குறளும் நமது நூல் என்கிறோம், மனுவையும் நமது நூல் என்கிறோம்.

அது கூடாது. "குறள் தான் எங்கள் நூல், மற்றதெல்லாம் எங்களதல்ல என்று கூற வேண்டும்.

அதுவல்லாது வெறும் வீரத்தையும் பழமையையும் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை.

ஒருவனுடைய வீடு இருக்கிறது, அந்த வீட்டை கடன் கொடுத்தவன் ஏலம் போட்டு சொந்தமாக்கி விட்டான். ஒரு காலத்தில் வீட்டுக்காரனாக இருந்தவன் திண்ணையில் உட்காருகிறான், ஏலம் எடுத்தவன் இங்கே உட்காராதே என்று தடுக்கிறான், முன்பு வீட்டுக்காரனாக இருந்தவன் இது ஒரு காலத்தில் எங்கள் வீடாக இருந்தது என்று பெருமை பேசினால் என்ன பயன்?

அதே போன்று இன்று நமது இலக்கியங்கள், நமது உரிமைகள், நமது வீரம், நமது கலை. நமது அரசு எல்லாம் பறி போயிற்று பிறர் கவர்ந்து விட்டார்கள். அந்த நிலையிலிருந்து கொண்டு "எங்கள் குறள் தான் சிறந்தது. அதில் எல்லாம் இருக்கிறது என்று கூறுவதால் மட்டும் பயன் ஏற்படாது. அந்தக் குறள் மேன்மையடைய—கருத்துக்கள் மிளிர. அதனால் நாம் உரிமை பெற, நாம் பழைய நிலை அடையப் பாடுபட வேண்டும்.

மனு போன்ற நமக்குப் புறம்பான நூல்களைப் புறக்கணிக்க வேண்டும், அவைகள் நம்மதல்ல என்று தள்ள வேண்டும். எல்லாம் நமது என்று பத்து, பதினொரு நூல்களை ஏந்தித்திரியக் கூடாது.

குறள் தான் நம்முடையது. அது தான் நமக்குரியது. குறள் தான் நமக்கு முதன்மையானது மற்றதெல்லாம் பின்னால் இருக்க வேண்டியது என்ற முடிவுக்கு வர வேண்டும்,

எல்லாவற்றையும் நமது.நமது என்றால் பின் ஒன்றும் நமக்கு ஏற்றதாக இருக்காது! ஆகவே இதை உணர்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டுகிறேன்.

நான் கூறும் இந்த உண்மை தேர்தலில் அனுபவப்பட்டவர்களுக்குத் தெரியும்.

ஒரு வீட்டில் நாலு ஓட்டுகள் இருக்கிறதென்று தெரிந்தால் எல்லாக் கட்சிக்காரர்களும் சென்று ஓட்டு கேட்பார்கள். ஒவ்வொருவருக்கும் உங்களுக்குத் தான் என்று கூறுவார்கள். ஒரு ஓட்டு என் அண்ணனுக்கு ஒன்று தந்தைக்கு, ஒன்று என்னுடையது. இன்னொன்று இன்னொருவருடையது ஆனால் அதற்குப் பணம் தந்து விட்டால் சரியாகி விடும் என்று எல்லாக் கட்சிக்காரர்களிடமும் கூறுவார்கள்.

அது போன்று எல்லாம் நம்முடையதென்று ஏமாந்து விடக் கூடாது. நம்முடைய வாழ்வு ஒன்றாக இருக்க வேண்டும்!

இன்று நமக்கு வள்ளுவர் உருவம் கிடைத்திருக்கிறது. நமக்கென்று ஒரு படம் இருக்கிறது. அது அழகானதா என்று பார்க்கக்கூடாது அப்படிப் பார்த்தால் கிருஷ்ணன் படம் பார்ப்பதற்கு நன்றாக தான் இருக்கும் அதை விட புத்தர் படம் நன்றாகத் தான் இருக்கும் பரமசிவன் படம் கோரமாக இருக்கும்.

இந்தப் படங்களில் எது நமக்கு வேண்டும், படங்களில் இருப்பவர்கள் கூறியது என்ன? அவைகளால் நமக்குப் பயன் என்ன என்று எண்ண வேண்டும்.

கருத்துக்குந்ததை சொன்னது எது என்று தான் பார்க்க வேண்டும் பட அழகுகளைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது,

ஒரு அரசனின் மகளுக்கு மணமகனைத் தேர்ந்தெடுக்க ஐம்பத்தாறு அரசர்களை வர தேசத்து வழைத்து உட்கார வைத்துக் கொண்டு, தன் மகளிடம் அரசன் ஒரு மாலை கொடுத்து. "இந்த ஐம்பத்தாறு பேரில் எந்த அரசன் உனக்குப் பிடிக்கிறானோ அவனுக்கு உன் கையிலிருக்கும் மாலையைச் சூட்டு என்று கூறினானும் அதற்கு அந்த அரசகுமாரி ஐம்பத்தாறு அரசர்களும் பிடித்திருக்கிறார்கள். ஒரு மாலை கொடுத்தால் எப்படி போடுவது என்றாளாம்.

அப்படியல்ல, ஐம்பத்தாறு அரசர்களில் ஒருவருக்குத் தான் மாலை போட வேண்டுமென்று அரசன் கூறியதாகக் கதை.

அதன்படி பல படங்களைக் காட்டி இது நமது என்றால் எதை ஏற்றுக் கொள்வது.

நான் அடிகளாரிடம் ஒன்று கூற ஆசைப்படுகிறேன்.

நாங்கள் நாட்டு மக்களின் நன்மைக்காக—நாட்டு மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்டு வருகிறோம். எங்களது பணியால் யாருக்கும் தீமையை உண்டாக்கும் நிலையில் பணி செய்ய மாட்டோம்.

எங்கள் கருத்துக்களால் யாருக்கும் தீமை பயக்கும்படியான நிலை ஏற்படும் நிலையை உண்டாக்க மாட்டோம், எங்கள் பணியால் ஒழுக்கக் கேடு உண்டாகும் பணியான நிலை ஏற்படும்படி செய்ய மாட்டோம்.

அடிகளார் அவர்களே, உங்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன். எங்கள் பிரச்சாரத்தால் ஒழுக்கம் கெடும்படியான காரியம் நடந்து விடாது. கேடு பயக்கும் காரியங்கள் செய்து விட மாட்டோம். நாங்கள் எடுத்துள்ள முயற்சி வெற்றியடையும் எண்ணம் பாடுபடுவோம்,

தீய நெறிகளில் மக்களைக் கொண்டு போக மாட்டோம். மக்களை நல்வழிக்குக் கொண்டு போகவே இயக்கம் நடத்தி வருகிறோம்.

நாடு முன்னேற, மொழி வளர்ச்சியுற, நாட்டு மக்கள் முன்னேற பாடுபட்டு வருவோம் என்று உறுதி கூறுகிறேன்.

ஓவியர் வேணு கோபால் அவர்கள் வரைந்துள்ள படத்தை உங்கள் முன் வெளியிடுகிறேன்.

அந்தப் படம் வெளியில் விற்கப்படுகிறது. தேவையானவர்கள் வாங்கிக் கொள்ளுங்கள். வள்ளுவரின் மலரும் இங்கே விற்கப்படுகிறது.

இந்தச் சிறப்பு மிக்க விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கொடுத்தமைக்கு விழாக் குழுவினருக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எவரும் எண்ணிக் கூட பார்க்க முடியாத எத்தனையோ போராட்டங்களை நடத்தி இருக்கிறோம்! எத்தனையோ இளைஞர்கள் உயிரை துச்சமென மதித்து பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, திராவிடத்தின் 'விடுதலைக்காகவே தன் வாழ்க்கையையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றனர்! இத்தகைய உத்தம தியாகிகள் இருக்கும் போது நாம் எதற்கும் அஞ்சத் தேவையில்லை!

அறிஞர் அண்ணா அவர்களே! தங்களுக்கே உரிமையான இளகிய மனதை கொஞ்சம் விட்டு விட்டு, கொஞ்சம் கடுமையான கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தித் தாருங்கள்! உங்களுடைய நெற்றிப் புருவம் கொஞ்சம் உயருமானால், உங்களுடைய கண் கொஞ்சம் சிவக்குமானால் அதை தட்டி நடந்திட எங்களுக்கு யாருக்கும் தைரியமில்லை!

"அண்ணா என்ற பாசம்" மட்டும் எங்களுக்கு இருந்தால் போதாது, உங்களிடத்தில் கொஞ்சம் பயமும் கொஞ்சம் அச்சமும் ஏற்பட வேண்டும்! அண்ணா அவர்களே! இது உங்களுக்குத் துளியும் பிடிக்காத விஷயம் தான், என்றாலும் எங்களுடைய நன்மைக்காக கொஞ்சம் கடுமையாக இருங்கள்!

உங்களைக் கண்டால் எங்களுக்கு அன்பு பிறக்கிறது, ஆசை வளர்கிறது, ஆர்வம் உண்டாகிறது! உங்களுக்குள்ள பண்புதான் இதற்கெல்லாம் காரணம்! என்றாலும் அன்பு மட்டும் போதாது, பாசம் மட்டும் போதாது, அச்சமும், பயமும் உண்டாக வேண்டும்! தயவுசெய்து உங்கள் உள்ளத்தைக் கொஞ்சம் கடுமையாக்கிக் கொள்ளுங்கள், எங்களிடையே எல்லையில்லாத கட்டுப்பாடு தானாகவே வளர்ந்து விடும்! நீங்கள் அதிர்ந்து ஒரு வார்த்தையும் பேச வேண்டாம்! பார்வையால் மட்டும் கொஞ்சம் சொல்லுங்கள்! உங்கள் பழககத்தை மாற்றிக் கொண்டுகொஞ்சம் சொல்லுங்கள்!

பொதுச் செயலாளர் அவர்களே! நீங்கள் ஜனநாயக முறைப்படி தான் தேர்ந்தெடுக்கப் பட்டு வந்திருக்கிறீர்கள்! என்றாலும் எங்களுக்கு கட்டளையிடும் உரிமை உங்களுக்கு இருக்கிறது! கழக நன்மைக்காக யாருக்கும் அஞ்சாமல், பரிவு பாசம் காட்டாமல் பணி புரியுங்கள்!

பொதுக்குழு உறுப்பினர்களே! உங்களுக்குப் பொறுப்பு மிகமிக அதிகமானது என்பதை மறந்து விடாதீர்கள்! கழகம் இன்று வளர்ந்துள்ள நிலையில் நீங்கள் செய்ய வேண்டிய பணி ஏராளமாக உண்டு! தேர்தலுக்கான ஆக்க வேலைகளில் நீங்கள் ஈடுபட இருக்கிறீர்கள், சொந்த வெறுப்பு, விருப்பு இல்லாமல் பணிபுரிந்து கழகத்தை வளர்க்க வேண்டும்.

காங்கிரஸ் கட்சியைப் போல் நமக்கு ஐம்பது லட்சம் உறுப்பினர்கள் தேவையில்லை! ஒரு ஐந்து இலட்சம உறுப்பினர்களே போதும். அதற்கும் குறைவாக இருந்தால் கூட பரவாயில்லை, கொள்கையற்ற ஐம்பது இலட்சம் பேர்களைக் கொண்ட கட்சியைவிட கொள்கையோடு வாழும் ஐந்து இலட்சம் பேர்களைக் கொண்ட கட்சியே பலம் வாய்ந்ததாகும், சக்தி வாய்ந்ததாகும்.

நம்முடைய எதிர்காலம் மிகமிக பயங்கரமானது! அதையெல்லாம் சமாளிக்க நாம் நிச்சயமாக தயாராக இருக்க வேண்டும். அதற்கான பணியில் அண்ணா அவர்களும், பொதுச் செயலாளர் அவர்களும், பொதுக்குழுவும் ஈடுபட வேண்டும். இதுவே எங்களது தாழ்மையான வேண்டுகோளாகும்—கழகத்தின் ஆட்சியை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுடைய வேண்டுகோளும் இதுவாகத்தான் இருக்கும, இருக்க வேண்டும்.

நாம் நீண்ட காலமாகவே பத்திரிகை பலமில்லாது இருந்து வந்தவர்கள். மாற்றார்களுடைய பத்திரிகைகளும் நமக்கு சாதகமாக இருக்கவில்லை. அறிஞர் அண்ணா அவர்களின் பெருந்தன்மை காரணமாக இப்போது பல பத்திரிகைகள் நமக்கு நல்லாதரவை நல்கி வருகின்றன. ஆனால் அந்த பத்திரிகைகளை நம்பியே நாம் இருந்து விட முடியாது.

கழக நண்பர்கள் நடத்திடும் ஏடுகள் ஓரளவு இந்தக் குறையைப் போக்கி இருக்கின்றன. என்றாலும் நம் ஏடுகளிடையே இன்னும் சரியான கட்டுப்பாடு ஏற்படவில்லை என்பதையும் நாம் அறிய வேண்டும்.

ஏடுகளுக்கு பொதுவாக சுதந்திரம் இருக்க வேண்டும்! ஆனால் கட்சித் தோழர்கள் நடத்தும் ஏடுகளுக்கு கட்சிக் கொள்கைகளைச் சொல்லும் உரிமைதான் இருக்க வேண்டும். இதனை கழக நண்பர்கள் உணர்ந்து பணி புரிய வேண்டும்.

நீண்ட காட்களாக இருந்து வரும் எங்களது ஆசையை வேண்டுகோளாக வைததுருக்கிறோம். நல்ல பலனை கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எங்களுககு இருக்கிறது.

---

(நெடுஞ்செழியன் பேச்சு)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதி அமைச்சர்சுப்பிரமணியம் பணம் இல்லை என்று கூறி விட்டால் அவரால் ஒன்றும் செய்ய இயலாது.

ஆஸ்பத்திரி தொழிலாளர்களுக்கு 1-0-0 ரூபாய் வாடகையிலிருந்த வீட்டை 3-8-0 ரூபாயுக்கு உயர்த்தியதைப் பற்றிப் பேசினார்கள்.

அந்த நீதியற்ற செய்கை மந்திரி மாணிக்கவேலரிடம் கூறியிருக்கிறோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும்கூறியிருக்கிறோம், அவர்களும் ஆவன செய்வதாகவும், அதைப் பற்றிக் கவனிப்பதாகவும் கூறியுள்ளார்கள்

நான் தலைவனாக இருக்கும் இந்த சங்கத்தின் மூலம் அனுப்பும் நியாயமான உரிமைகளைக் அரசாங்கம்கவனிக்கப்படவில்லையென்றால அறிஞர் அண்ணா அவர்கள் மூலம் சட்ட மன்றத்தில் பேசும்படி செய்து பொது மக்கள் அறியும்படி செய்வேன்! அப்படிச் செய்தும் கவனிக்கப் படவில்லையானால் நமது நண்பர் ஈ.வெ.கி, சம்பத்தவாகளிடம் பாராளுமன்றத்திலும்பேசும்படி செய்து இந்த அரசாங்கத்தின் செய்கையை நாடறியச் செய்வேன்.

அப்படியும்முடியவில்லையானால் நானும்எனது நண்பர்களும்பேசுகின்ற பொதுக்கூட்டங்களில்மக்கள் முன்வைப்போம். மக்களின் அன்பைப் பெறுவோம்.அவர்கள் ஆதரவையும் பெறுவோம்.

இதுவெல்லாம் செய்ய வேண்டுமானால் நமது தொழிற் சங்கத்தை வலுப்படுத்த வேண்டும். அதற்கு நீங்கள் மனப்பூர்வமான ஆதரவு கொடுகக வேண்டும். அதன் மூலம் தான் நாம் குரல் எழுப்ப வேண்டும்.

ஏசுநாதர் ஒரு சந்தர்ப்பத்தில கூறியது போன்று "கேள் கொடுககப்படும், தட்டினால்-திறக்கப்படும் என்றபடி நாம் கேட்டால்தான் கிடைக்கும். வற்புறுத்தினால் தான் பலனடைய முடியும்.

ஆகவே நாம் ஒற்றுமையோடும் கட்டுப்பாடுடனும், நீதியோடும், நேர்மையோடும் நமதுகுறைகளை எடுத்துச் சொன்னால். நமது ஒற்றுமையைக்கண்டு. கட்டுப்பாட்டை உணர்நது அதிகாரிகள் உடனே நிறைவேற்றுவார்கள்.

நான் மந்திரி மாணிக்கவேலரிடமும், சுகாதார இலாகா செயலாளரிடமும் (ஹெல்த் செக்ரட்டரி) ஆஸ்பத்திரிக்கு—ஆஸ்பத்திரி சம்பள வித்தியாசம், பத்தாண்டு, பதினைந்தாண்டுகளாக வேலை செய்தும் நிரந்தர, மாக்கா திருப்பதைப் பற்றியும், வீட்டு வசதிகளைப்பற்றியும், ஓய்வுசம்பளம் பற்றியும் 'இவைகளையெல்லாம் கவனித்து தொழிலாளிகளுக்குள்ள குறைபாடுகளை நீக்க வேண்டிய அவசியம் பற்றியும் எடுத்துக்கூறினேன்'

அவர்கள் நான் கூறியதையெல்லாம் கேட்டு வேண்டியதைச் செய்வதாகவும், தொழிலாளர்கள் குறைகளை அடிக்கடி கூற வேண்டுமென்றும் கூறினார்கள்

சுகாதார செயலாளர் மிகவும் அன்போடும், அக்கரையோடும் நான் சொன்ன குறைகளைக் கவனிப்பதாக வாக்களித்தார்.

இன்று இக் கூட்டத்திற்கு வருவதற்கு முன் நண்பர்களுடன் நான் மன நோய் மருத்துவ மனை கண்காணிப்பாளரிடம் சென்று, மன நோய் மருத்துவ மனைச் சிப்பந்திகளின் குறைபாடுகளையும், அவர்களின் படி, ஓய்வு நேரம் ஊதிய உயர்வு இவைகளைப் பற்றி எடுத்துரைததேன், அவர் அன்போடு நாங்கள் கூறியதையெல்லாம் கேட்டு தம்மாலானதையெல்லாம் செய்வதாகவும் உறுதி கூறினார்.

மற்றும் ஓய்வுப் பெற்ற பின் சிப்பந்திகள் வாழ்வதற்கான ஊதியம் கொடுப்பது பற்றியும் வாதாடி இருக்கிறேன்.

இப்படியெல்லாம் கூறுவதால் எங்களை தீரர்களென்றோ சூரர்களென்றோ, அதி மேதாவிகளென்றோ சொல்ல வேண்டுமென்பதற்காகவல்ல. எங்கள் கடமைகளை, பொறுப்புகளைச் செய்கிறோம், செய்வோம் என்று கூறுவதறகே இதை இங்குகூறுகிறேன.

மற்றும் உங்களிடம் ஒரு வேண்டுகோள்விடஆசைப்படுகிறேன்.

நீங்கள் இந்த சங்கத்தை வலிவுடனும், பொலிவுடனும் இருந்து நம்முடைய குரல் அதிகாரிகளிடம் ஒலிக்கும் படிச் செய்தால், சங்கததைக் கட்டிக் காத்தால் எங்களாலானதைச் செய்ப முடியும், நம்முடைய குறைகளையும் ஒருவாறு நீக்க முடியும்.

இன்று நாம் ஊதியம்உயர்த்த வேண்டுமென்று கூறுவது வேடிக்கைக்கல்ல. அதிகாரிகளிடம் வம்பு செய்வதற்கல்ல.

இன்று விலைவாசிகள்உயர்ந்து வாங்கும் படியான சக்தியின்றி இருக்கிறோம். வருவாய்க்கு மேல் வாங்கும் சக்தி உயர்ந்திருக்கிறது.

1938-ம் ஆண்டு அரசினர் ஒரு நிபுணர் காட்டி நியமித்தனர், அந்தக் கமிட்டி விசாரணைகளைச் செய்து ஒரு அறிக்கை தயாரித்தது அந்தக் கமிட்டி தயாரித்த அறிக்கையில் அந்தக் கமிட்டியார் மக்கள் உயிரோடு வாழ்வதற்காக— உயிரோடிருப்பதற்காக எவ்வளவு கொடுப்பது என்று முடிவு செய்தனர்.

(12-ம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper in CEYLON
இலங்கையில் 20 சதம்
Regd No M. 7074 விலை 16 காசு MALAIMANI Phone No. 83285

# அதட்டல்-அதிகாரத்தால் சாதிக்க-முடியாததை அன்பால் சாதிக்க முடியும்!

## தொழிலாளர்களின் நல்வாழ்வே நமது குறிக்கோள்!

(நெடுஞ்செழியன் பேச்சு)

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டங்கள் வாங்கவும், வீட்டு வாடகை கொடுக்கவும் மூன்று வேளை சாப்பிட்டு உயிரோடி ருக்கவும் 1938ல் முடிவு செய்தது. குறைந்த பட்சம் ரூ 28 இருக்க வேண்டுமென்று முடிவு செய்தனர்.

இந்த ரூபாய் இருபத் தெட்டில் மக்கள் ஆடம்பரமாக வாழவில்லை. வீடு கட்டி, தோட்டம் துறவு வாங்கி உல்லாசமாக இருக்கவல்ல! ஒரு மனிதன் உயிரோடு வாழ்வதற்காக இதை நிர்ணயித்தனர்!

இந்த ரூபாய் இருபத்தெட்டை வைத்து குழந்தை குட்டிகள் குடும்பம் வாழ்வதற்கும், குழந்தைகளைப் படிக்க வைக்கவும் எப்படி சாத்தியமாகும். இதைப் பற்றி அவர்கள் கூறவில்லை! ஒரு மனிதன் உயிரோடு வாழ்வதற்கு என்றே கூறினர்.

அப்போது அவர்கள் கூறியது மனிதனின் வாழ்க்கைப் புள்ளி நூறு சதவீதம் இருக்கிறது என்று முடிவு செய்தனர்,

இன்றைய நிலையென்ன! இன்றைய புள்ளி விபரங்கள் எவ்வளவு உயர்ந்திருக்கிறது. இதைப் பார்க்க வேண்டும்.

இன்றைய வாழ்க்கைத் தர உயர்வு நூறிலிருந்து நானூற்றைம்பது சதவீதம் என்கின்றனர்!

அப்படியானால் அந்த நிபுணர்கள்—3 மடங்கு கணக்குப் படி 180 ரூபாய் கொடுக்க வேண்டும்! அதுவும் மக்கள் உயிரோடு வாழ அப்படிக் கொடுக்கிறார்களா? 120 ரூபாய் கொடுக்க வேண்டுமென்றால் அதற்கும் பதிலில்லை.

இந்தப் புள்ளி விபரக் கணக்கை நாம் கூறவில்லை, அரசினர் நியமித்த நிபுணர்க் கமிட்டியே கூறுகிறது.

இப்போது அவர்கள் கொடுத்துவரும் சம்பளமோ, பஞ்சப் படியோ ஒரே நிர்வாகத்திலிருக்கும் மருத்துவ மனைகளில் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. இந்த முறை மாற வேண்டும்,

இன்று மக்கள் தாங்கள் பற்றுவரும் ஊதியத்தைக் கொண்டு அரைப் பட்டினி, கால் பட்டினி இருந்து உயிர் வாழ்கிறார்கள்.

இன்று பெரும்பான்மையான மக்கள் மூன்று வேளை சாப்பிடுகிறவர்கள் 100-க்கு 5 பேரைக் கூடக் காண முடியாது. ஒரு நாளைக்கு 2 வேளையும், ஒரு வேளையும், வாரத்தில் சில நாட்கள் பட்டினியாகவும் இருந்து வருவதைக் காண்கிறோம்.

இன்னும் நல்ல சோறு ருசியாக எல்லா வகைகளையும் வைத்துச் சாப்பிடுகிறவர்கள் மிகக் குறைவாக காணலாம்.

நான்கு நாட்களில் ஒரு நாள் நல்ல உணவு சாப்பிடுகிறவர்களும், மூன்று நாட்களில் ஒரு நாள் நல்ல உணவு சாப்பிடுகிறவர்களையும் நாம் காண முடிகிறது!

வாழ்க்கையில் நல்ல சோறு சாப்பிட முடியாது! கல்யாண வீடுகளிலும், கருமாதி வீடுகளிலும் போய் நல்ல சோறு சாப்பிடுகிறார்கள்.

இதைப் பற்றிச் சிந்திப்பவர்கள் எவருமில்லை!

அரசாங்கம் புள்ளி விபரங்கள் கொடுத்தால் மட்டும் போதாது. விலைவாசிகள் குறைவதற்கு வழி வகைகள் செய்ய வேண்டும்.

மக்கள் வாங்கும் படியான நிலைக்கு—வருவாய்க்குத் தகுந்த படி விலைவாசிகள் இருக்க வேண்டும். இன்றேல் வாங்கும் படியான வசதிகள் செய்ய வேண்டும்.

1947-48-ம் ஆண்டுகளில் இருந்ததை விட மூன்று மடங்கு—நான்கு மடங்கு விலை வாசிகள் உயர்ந்து விட்டது. இன்னும் பார்க்கப்போனால் சில பொருள்கள் ஐந்து மடங்கு உயர்ந்திருக்கிறது.

வருகின்ற வருவாயைக் கொண்டு ஐந்து மடங்கு உயர்ந்திருக்கும் விலைவாசிகளை வாங்கி வாழ்க்கையை எப்படி வாழ முடியும்.

சம்பளத்தை உயர்த்தியிருக்கிறோம் என்று அரசினர் கூறலாம்.

விலைவாசிகள் உயர்ந்திருப்பதற்குத் தக்கப்படி சம்பளம் தர வேண்டும், பஞ்சப்படி தர வேண்டும்!

சாண் உயர்ந்தால்—முழம் சரிந்து விடுகிறது! அப்படி இருந்தால் எப்படி வாழ முடியும்!

இதையெல்லாம் போக்கவே நமது சங்கம் பணியாற்றி வருகிறது! அரசினரிடம் எடுத்துக் கூறி வருகிறது.

மன நோய் மருத்துவச் சிப்பந்திகளின் வீட்டு வசதி சொல்ல முடியாத—மோசமான நிலையிலிருக்கிறது. அழிவுமின்றி அவர்கள் வாழ்வே பயங்கரமானதாக—ஆபத்தானதாக இருந்து வருகிறது!

இன்று நாட்டில் மன நோய் இல்லாதவர்களிடம் தொடர்பு கொள்வது—பழகுவது சங்கடமாக இருந்து வருகிறது! ஆனால் மனநோய் உள்ளவர்களிடம், சுயபுத்தியற்றவர்களிடம் எப்படி தொடர்பு கொண்டிருப்பது!

எப்படிப் பழகுவது அவர்கள் கொடுக்கும் தொல்லைகளை—எப்படிச் சமாளிப்பது!

அவர்கள் கொடுக்கும் தொல்லைகளைப் பொறுக்க முடியாததாலேயே மருத்துவ மனைக்கு கொண்டு வந்து விட்டு விடுகிறார்கள்!

அப்படிப்பட்டவர்களிடம் உயிரைப் பணயம் வைத்து ஆபத்துக்களை எதிர்பார்த்து, பயங்கர நிலைகள் நடக்கும் என்று தெரிந்து அவர்களிடம் நமது தோழர்கள் பணியாற்றுகிறார்கள்!

மனநோயால் பீடிக்கப்பட்டவர்கள் தங்களது சுய நினைவில்லாத காரணத்தால் சிப்பந்திகளிடத்தில் பலாத்காரச் செயல்களில் ஈடுபடலாம்!

தகாத காரியங்களில் அங்கங்களுக்கு ஊனமுண்டாகும் செயல்களில் முற்படலாம்!

கண்ணைப் பிய்க்கவும், கை, கால்களைச் சேதப்படுத்தவும் முற்படலாம். அங்கஈனர்களாக ஆகும் படியான நிலையையும் உண்டாக்கலாம்!

இந்த மாதிரி அபாயகரமான பணிகளைச் செய்யும் சிப்பந்திகளுக்கு உயிருக்கு—வாழ்க்கைக்கு அரசினர் என்ன உறுதி கொடுத்திருக்கிறார்கள்! என்ன வசதிகள் செய்திருக்கிறார்கள்!

அப்படி உயிரைப் பணயம் வைத்துள்ள சிப்பந்திகளுக்கு நர்சுகளுக்கு அலவன்ஸ் கேட்டால் வாழ்க்கைக்கு உத்தரவாதம் கேட்டால் வாளாக இருக்கிறார்கள்.

“எங்கள் பணி செய்யும் போது உயிர் போகும் படியான ஆபத்துக்கள் இருக்கிறது. அதற்கு அலவன்ஸ் கொடுங்கள்” என்று கேட்பதற்கும் அரசினர் கவனிக்கப்படவில்லை!

இந்த விபரீத செயல்களை என்னவென்று சொல்வது?

உயிரை ஈடு செய்து எங்கள் உயிர் போனாலும் பரவாயில்லை.

எங்கள் உயிருக்கு ஈடாக மூன்று ரூபாய் அலவன்ஸ் கொடுங்கள் என்று அரசினரிடம் கேட்கிறார்கள். இதற்கு அரசினர் மனமிறங்கி அவர்கள் கோரிக்கையை நிறைவேற்ற மறுக்கிறார்கள். மற்றும் அவர்கள் பிற்கால வாழ்க்கைக்கு வசதி செய்ய வேண்டுமென்று கேட்டாலும் அரசினர் மௌனம் சாதிக்கின்றனர். இது எவ்வளவு வெட்கக்கேடான செய்கை என சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

ஒருவன் உயிரை விட மூன்று ரூபாய் பெரிதென எண்ணும்படியான நிலை இந்த நாட்டை விட வேறு எந்த நாட்டிலும் காண முடியாது, இதைப்பற்றி அமைச்சர்களிடமும், அதிகாரிகளிடமும் வற்புறுத்தியிருக்கிறேன்!

இப்படிப்பட்ட நிலையை சர்க்கார் உணர வேண்டும்! பொது மக்களும் உணர வேண்டும்!

அப்படி நடந்து கொண்டால் பொது மக்களிடமும், அதிகாரிகளிடமும் அன்பையும் நல்லெண்ணத்தையும் பெற முடியும். அதனால் நமது காரியங்களையும் நிறைவேற்ற முடியும் என்று கூறி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

---

### வாசகர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும்

அன்புடையீர்,

அச்சகத்தில் சில மாற்றங்கள் செய்ய வேண்டியிருந்ததால் ‘மாலைமணி’ சென்ற இதழ் (13-3-60) நிறுத்த நேரிட்டது. இனி எவ்வித தாமதமின்றி வழக்கம் போல் தொடர்ந்து வெளிவரும் என்பதை வாசக நண்பர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

—பொறுப்பாளர்
மாலைமணி

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ், 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை.